வுடனே யார் சொல்லப்போகிறார்கள்? இனிமேல் நடக்க வேண்டுவதென்ன?" என்று குதூகலங் கொண்டு மனம் கேட்க, அறிவு கூறுகின்றது:

அறிவு கூறுதல்

இன்னமின்னம் பிறவிதனிற் பிறத்தல் நன்றோ?
இனிமேலும் பிறவாம லிருக்கை நன்றோ?
உன்னுகின்ற நினைவேது கருத்தங் கேதோ?
ஓதுகின்ற வாக்கேது, செவிதா னேது?
பன்னுகின்ற கலையேது பண்தா னெங்கே?
பாடுகின்ற சத்தந்தான் தொனித்த தெங்கே?
முன்னிலையாய் ஞானகுரு மொழிந்த தேது?
முத்திநெறி யாய்மனமே முனைந்து பாரே.

மனம் கேட்டல்

"ஆனால், எவ்விதத்திலேயும் பார்க்குமளவில் இந்தக் குடும்பச் சேற்றில் உழைத்துக் கொள்ளுகிறதும், அதற்கொத்தாசையாய் உலகத்தார் சொல்லை விசுவாசமாய் ஒத்துக் கொள்ளுகிறதும் துக்கமேயொழிய, உள்ளபடி குடும்பத்தார் என்மேல் பிரியமாயிருக்கிறதேயில்லை. எப்படியெனில், நான் சில நாள் சம்பாதனையில்லாமலும், தேகசௌக்கியமில்லாமலும் ரோகஸ்தனாய் இருக்கும்போது சர்வத்திர பேர்களும் என்மேல் மனம் சலிப்புற்றிருந்தது கண்டேன்; ஏவல் பணிவிடையில் வெறுப்பானதுங் கண்டேன்; சாலவும் பிரக்ஞை தப்பியிருக்கும்போது பெண்டு பிள்ளைகளை எதிர்வீட்டார் ஆஸ்தியைக் கேட்க சொன்னதுங் கண்டேன்; அவரவர்களும் ஒப்பாரி சொல்லி அழுகிற வயணமுங் கண்டேன்; எல்லாம் பொருளை இச்சித்திருப்ப தென்பதையும் அறியலானேன். எனக்கு உரிமையான பேர் ஒருவரையும் காணேன்; அல்லது சில நாளுழைத்து மக்கள் முதலாகிய பேர் சம்பாதிக்கச் சாமர்த்தியம் வருந்தனையும் உழைத்துப் போட்டு அதன் பின் சும்மா இருப்போமென்றாலும், என்னிச்சைப்படி நடக்கவுமாட்டாது. அதுவுமறியலானேன். ஆகையால் சத்துருவாகிய இந்தப் பேய்க்கூட்டங்களை விட்டுக் காயம் தளராமுன் சிவன் திருவடி அடைவதற்கு நீ சொன்னபடி சத்தியமாய் நடப்பேன்" என்று மனஞ் சொல்ல, அறிவு கூறுகின்றது:

அறிவு கூறுதல்

பொன்னின் நெஞ்சமே! சொற்படி கேட்கவும்
பொருந்தியே நன்றாக
இன்ன மின்னமும் பேதைமை கொள்வாயோ?
இல்லறந் தனைவிட்டுத்
தன்னைத் தானறி யாமலுஞ் சிவனடி
சார்வது மிழந்தக்கால்
பின்னம் பின்னமாய் இரண்டுங்கெட் டாயென்றே
பேதைமை கொள்வாயோ?

மனம் கேட்டல்

"இதனால், நான் தெளிந்த விதத்திலே பேதைமை என்பதிருக்குமிடமுங் காணேன்; சர்வ பணியு மறுத்து விட்டேன்; ஆனால், தெளிவாய்க் கேட்பதற்குத் தெரியும்படி செய்யுமுதவி வேண்டும்" என்று மனம் கேட்க, அறிவு கூறுகின்றது:

அறிவு கூறுதல்

கூத்த நெஞ்சமே! சற்குரு மலரடி தொழவகை கேட்பாயேல்.
பத்த னாகிய மானாபி மானமும் பற்றற விட்டேநீ
குற்ற மேதுமற் றெவ்விடங் காண்கினுங் கூறுடற் களிப்புற்றுப்
பற்று மாகியே திருவடி கதியெனப் பண்புடன் பணிவாயே.

மனம் கேட்டல்

"ஆனால், மானாபிமானம் விட்டு, குருவை எவ்விடங் காண்கிலும் மனோவாக்குக் காயம் ஒத்து அன்பு களிகூர்ந்து எண்சாண் தேகத்தை இரு கையாக்கி, நன்மலரை அவர் திருவடிக்குச் சார்த்தி, தீர்க்க தண்டம் பண்ணச் சொன்னாய்; அதிற் சந்தேகமில்லை; இவ்வளவும் இழந்து நான் இதற்கு அஞ்சுவேனா? அப்படியே செய்வேன். ஆனால், அதிகமாக உலகத்தோர் இகழத்தக்கவராகக் குரு மிகுந்த அசங்கிய ரூபாமாயிருந்தால் நான் பணியுமளவிலே நிந்திப்பார்களே! அல்லது அவ்வாறிருக்கினும், அப்படித்தான் செய்தல் முறைமையோ? என்று மனங்கேட்க, அறிவு கூறுகின்றது:

அறிவு கூறுதல்

குவலயத்தோர் சொல்கின்ற கேள்வி யாலே
கூசுகின்ற நெஞ்சமே! கூறக் கேளாய்:
அவலமாங் கடலுக்கு ளாழு மாண்பர்
அபிமானம் வந்துன்னை அண்டிற் றானால்
சவலையாய் நழுவிடுவாய் முத்தி மார்க்கந்
தான்கிடைப்ப தருமையதைச் சார்ந்தே நீதான்
சிவனடியை யடைவதற்குச் சற்கு ருத்தாள்
திருவுளத்துக் கொத்தவழி சொல்லு வாயே.

மனம் கேட்டல்

"ஆனால், சற்குருவின் திருவடியில் சரணஞ் செய்வதற்கு மார்க்க முண்டோ?" என்று மனங்கேட்க, அறிவு கூறுகின்றது:

அறிவு கூறுதல்

ஓம்நமசி வாயவென்ற அட்ச ரத்தை
உச்சிகண் புருவம்வாய் மூக்கு நாசி
தாமதங்க ளில்லாமல் முக்கா லுந்தான்
சற்குருவின் றிருவடியில் தான முத்தி

நேமமோ யிப்படியுஞ் செய்வ துந்தான்
நேரான சரணத்தின் தீட்சை யாகும்;
ஆம்பின்னே யென்றெண்ணி யிருந்தி டாதே
ஐயனுள்ளங் களித்திடவே யாசை வைப்பாய்.

மனம் கேட்டல்

"ஆனால், சரண தீட்சையுமறிந்தேன்; செய்யவுந் துணிந்தேன்; கருத்தில் செய்யும்படி குறித்தால் போதாதோ? காயத்தினாலும் மிகுதியாய் வணங்கிக்கொள்ள வேண்டுமோ?" என்று மனங்கேட்க, அறிவு கூறுகின்றது:

அறிவு கூறுதல்

காயமன வாக்கினால் அடைந்த கன்மம்
காயமன வாக்கினாற் கடக்க வேண்டும்;
காயமன வாக்கினா லொன்றொ ளித்தால்
கடமெடுக்க ஏதுவாங் கண்டு பாராய்;
நேயமுள ஐம்புலனாற் சூழ்ந்த துன்பம்
நீக்குதற்கு முறையிதுதான் நிலைத்துப் பார்நீ;
மாயவித்தை யாமென்று நழுவி டாதே
வஞ்சகத்தை நீவிட்டு வணங்கு வாயே.

மனம் கேட்டல்

"ஆனால், அப்படியே செய்கிறேன்; இன்னம் சற்குரு திருவுள்ளத்துக்குப் பாங்காய் நடக்கும் மார்க்கங்கள் சொல்லுக", என்று மனங்கேட்க, அறிவு கூறுகின்றது:

அறிவு கூறுதல்

வஞ்சனைபொய் சூதுகப டங்கள் நீக்கி
மானவபி மானமுதற் பெருமை நீக்கி
அஞ்சுகின்ற கோபமாங் காரம் நீக்கி
ஆசையதைப் பாதியடி யோடே நீக்கித்
துஞ்சவே சோதித்துப் பார்த்தா லுந்தான்
துணிவாகித் திருவடியே கதியென் றெண்ணித்
தஞ்சமென்றே ஐயனது நிழற்போற் காத்துச்
சரணத்தி னேவல்செய்து தழைத்தி டாயே.

மனம் கேட்டல்

"அப்படியே தொண்டு செய்கிறதற்கும் ஆளானேன்; எத்தொழிலுமில்லாமல் சர்வ ஆசையுமிழந்து நிரந்தமாயிருக்கிற பெரியவர்களிடத்தில் தொண்டு பட்டிருந்தால், வயிற்றுப் பசிக்கு அன்னம் வேண்டியிருக்குமே! அதற்கென்ன வயணம்?" என்று மனம் கேட்க, அறிவு கூறுகின்றது:

அறிவு கூறுதல்

இச்சையுடன் எத்தனைநாள் இவ்வுலகில்
வாழ்ந்தாலும் இடரே சொல்வார்
நச்சைவரு மிதனாலே தெளிவுற்ற
மனமென்று நல்லோர் சொல்வார்;
சச்சடியை விட்டுவிடு; மும்பொருளை
ஓர்பொருளாய்த் தனித்துப் பாராய்;
பிச்சையென்ன விசாரமென்ன? தலைமேலே
சுமந்துவரப் பெருமா னுண்டே.

மனம் கேட்டல்

"அப்படியிருக்கச் சிவ சொரூபத்தைப் பெற்றிருக்கின்ற பேர்கள், ஆசாரத்துக்கரகப் பல விதங்களான தொழில் செய்கிறதும், சித்துகள் வித்தைகள் செய்கிறதும், பொய் சொல்லுகிறதும், சிவ சின்ன வேடத்தைக் கபடமாகத் தரித்துக்கொள்ளுகிறதும் என்ன?" என்று மனம் கேட்க, அறிவு கூறுகின்றது:

அறிவு கூறுதல்

ஆனைமுதல் எறும்புகடைக் கமுதளித்துக்
காக்குமொரு வரனே யல்லால்
சேனைவித மாகவிந்த மானிடர்கள்
செய்வதெல்லாஞ் செகத்தின் மாயை;
ஊனைமுதல் சுமந்தவரார்? உண்டபின்பு
களைத்தவரார்? உற்றுப் பார்க்கில்
தேனையுண்டு ருசிகண்ட திருடனைத்தான்
கண்டவர்க்கு தெரியுந் தானே.

மனம் கேட்டல்

"ஆனால், அறியலானேன்; பெரியவர்களிடத்தில் பத்தி வைராக்கியத்துடனே நிமிட நேரமாகிலும் பிரியாமல் சரணடைந்து ஏவலுஞ் செய்து கொண்டிருக்கிறவர்களுக்கு எந்தப் பதவி கிட்டும்?" என்று மனம் கேட்க, அறிவு கூறுகின்றது:

அறிவு கூறுதல்

ஆசான் கிருபை மிகுந்ததனால் அந்த வுடல்போய் மறுவுடலில்
கூசா திருந்துந் தன்னண்டைக் குறைவொன் றில்லா நிறைவாகத்
தேசா நேசர் சூழ்ந்திருக்கத் திருவோ லக்கஞ் சேவிக்க
ஈசா வென்றே மறைபோற்ற எய்தும் பரமபதம் நெஞ்சே!

மனம் கேட்டல்

"ஆனால், நிழல்போலப் பிரியாமல் சரணத்து ஏவலுஞ் சலியாமற் செய்கிறேன்; ஐயோ! எத்தனை பிறவியோ எடுத்துவந்து நொந்திருக்

கிற நான். இன்னுமொரு பிறவி பிறப்பேனோ! முழுதும் பிறவாமலிருக்கிற மார்க்கம் உண்டோ? அதைச் சொல்லுக என்று மனங்கேட்க, அறிவு கூறுகின்றது:

அறிவு கூறுதல்

உடல்பொருளும் ஆவியுஞ்சற் குருநா தற்கே
உண்மையுடன் உதகத்தால் தாரை வார்த்து
நடமாடு மிம்மூன்று மெனவென் றெண்ணி
நாயகனாஞ் சீவனையே யடிமை யாக்கு;
திடவாக்குத் தவறாமல் நிலைத்து நெஞ்சே!
தேகந்தா னொழியளவும் உதவி செய்தால்,
படமாடும் அரவத்தை அணிந்த ஈசன்
பதம்பெறுவாய் உள்ளபடி பகர்ந்திட் டேனே.

மனம் கேட்டல்

"ஆனால், நல்லதாயிற்று! இதுவரைக்கும் நானே உடல், பொருள், ஆவி மூன்றுக்குமுடையவனென்று நீ சொன்னபடி கேட்டுச் சருவ சங்கையுமிழந்து நிருவிகாரியாய் என்ன கதியென்று கேட்குமளவிலே சீவனுண்டென்றும், சீவனுக்கு உடல் பொருளாவி சொந்தமென்றும், அவற்றைக் குருவுக்குத் தத்தஞ் செய்து சீவனை அடிமையாக்கி ஆசான் சொற்படி நடந்து சிவனாகிறதாய்ச் சொன்னாய்; மகா சந்தோஷமாயிற்று! அப்படியே சீடன் முத்தியடைகிறதானால், நானித்தனை பிரயாசைப்பட வேண்டியதென்ன? நான்-நீ யார்? இவ்வளவு நான் சந்தேகமற்றுத் தெளிவு கொண்ட இலாபமென்னவாகப் போகிறது?" என்று மனம் கேட்க, அறிவு கூறுகின்றது:

அறிவு கூறுதல்

சீவனே நீயாகும்; அறிவும் நீயாம்;
சிவன்றானே நீயாம்; பரமும் யாகும்;
தாவுகின்ற செயலுடனே மனமென் றுன்னைச்
சாற்றியதோர் நாமமாஞ் சர்வ சங்கை
மேவவே மொழிகிறது முனதால் நெஞ்சே!
மெல்லமெல்லச் சொற்படியே மேவி னக்கால்
நாவுதனிற் பிரிக்கின்ற பேத மற்று
நாம்சிவமாய் வாழலாம் நாடிப் பாரே.

மனம் கேட்டல்

"ஆனால், அறியலானேன். இனி உடல்பொருளாவி மூன்றும் குருவுக்குத் தத்தம் பண்ணச் சொன்னாய்; இந்த மூன்றையுந் தெரியப்படுத்துக" என்று மனம் கேட்க, அறிவு கூறுகின்றது:

அறிவு கூறுதல்

உடலென்றாற் சடாதார உடலே யாகும்;
உயிரான பிராணனே யாவி யாகும்;
திடமாக இரண்டையுந்தா னெனதென் றுற்ற
சீவனே சிற்றம்பலப் பொருள தாகும்;
அடைவாக இம்மூன்றுங் கொடுத்துத் தன்னை
அடிமையெனச் சத்தியமாயிருந்தால் நெஞ்சே!
இடமான கதிபெறவே உபதே சிப்பார்;
இப்படியே குருபதத்தில் இட்டம் வையே.

மனம் கேட்டல்

"அப்படியே செய்யலுற்றேன்; இனித் தீட்சையென்பதும், நூலென்பதும், குருசொல்லென்பதும், சாதகமென்பதும், முத்திவீடு என்பதும் தெரியச் சொல்லுக" என்று மனம் கேட்க, அறிவு கூறுகின்றது:

அறிவு கூறுதல்

தீக்கையது நூலாகும்; நூல்வி ளக்காம்;
திறமான சற்குருசொல் உபாய மாகும்;
தாக்குகின்ற சாதகந்தா னேணி யாகும்:
சபையென்ற வெளிதானே வீட தாகும்;
மார்க்கமென்ற திருநெஞ்சே! முன்னோர்கூட
வாழ்த்தவரும் இப்படிய மருவிப் பாராய்;
நோக்கையிலே இதிலொன்று நழுவிற் றானால்
நொந்துநொந்து பிறவியினில் நுழைக்கும் பாரே.

மனம் கேட்டல்

"எல்லாம் உள்ளபடி யென்றறிந்து கொண்டேன்; இனிமேல் சற்குருவினுடைய திருவுளம் மகிழ்ந்து, நான் கடைத்தேறும் பொருட்டு உபதேசஞ் செய்யும்படி சொல்லுக!" என்று மனம் கேட்க, அறிவு கூறுகின்றது:

அறிவு கூறுதல்

அப்படியே செய்விப்போம் அழகு நெஞ்சே!
ஆசான்றன் திருவடிக்கே அன்ப தாக
எப்படியா கிலுமுன்னை மாயை கிட்டி
இதம்போலாம் சென்னமதற் கிடங்கொ டாதே
செப்படிபோல் வந்ததொரு சென்னம் நீங்கிச்
சிவானந்த போதகமாய்த் தெளிவாய் நீயும்;
மைப்படியுந் கண்ணிபங்கன் குருவாய் வந்து
வாதனையைத் தீர்த்திடுவான் வணங்கு வாயே.

பொதுக் கணிப்பு

இதுவரையிலுஞ் சீவனைப் பின்னிட்டு மனதை முன்னிட்டு, சற்குருவைப் பின்னிட்டு, அறிவு முன்னிட்டுக்கொண்டு மனத்தினுடைய பணியறுத்துச் சற்குரு கடாட்சம் பெற்றுக்கொள்ளும் வகை கூறினது. இனி, மனத்தைப் பின்னிட்டு ஜீவனை முன்னிட்டு, ஜீவனுக்குள் மனமொடுங்கி முத்தியடையத் தக்கதாக அறிவைப் பின்னிட்டுச் சற்குருவை முன்னிட்டு, அறிவைச் சீவனுக்குப் போதித்து, நீ நான் என்று இரண்டில்லாத பரிபூரணமாய் ஆக்கும் பொருட்டுச் சீவனுக்குக் குரு சிவானந்தம் போதிக்கும் மார்க்கம் கூறுகின்றது.

இனி, ஆன்மா பேசத் தொடங்குகிறது. இந்தப் பேச்சினூடே குருவின் விளக்கங்கள் அங்கங்கே இடம் பெறுகின்றன.

உயிர் சொல்லுதல்

ஆதியே! அந்தமே! அருமை யான
அருட்கடலே! ஐயனே! அகண்ட முற்ற
சோதியே! சொரூபமே! சுகத்தைக் காட்டும்
சுத்தனே! சித்தனே! சுயம்பிற் பொங்கும்
பாதியே! பரமனே! பாரின மீதே
பரம்போகச் சுந்தரமா யெழுந்து வந்த
நீதியே! என்னுடைய பிறவி நீக்கு
நிச்சயமே திருவடிக்குச் சரணென் றேனே.

குரு சொல்லுதல்

தீக்கைமுறை யாகவே சரணஞ் செய்த
செல்வனே! ஞானமென்ற தீரம் பெற்றுப்
பாக்கியமாய் மெய்ப்பொருளைக் கொள்ள வேண்டிப்
பாரினிலே வெகுபேர்கள் பதைத்து வந்தார்;
பாக்கியத்தாற் சிதறினார் சிலராம் பேர்கள்;
பாழ்மனத்தாற் சிதறினார் சிலராம் பேர்கள்;
தாக்கியதோர் சாதகத்தில் தாளா மற்றான்
தவறுண்டே போயினார் சங்கை யுற்றே.

சங்கையது விட்டாற்போல்தொண்டு பட்டுச்
சாத்திரத்தின் பூட்டுகளைத் தெரிந்து கொண்டு
மங்களமாய்த் தீட்சைதனைப் பெற்று நன்றாய்
வையகத்தின் சுழலினிலே மயங்கிச் சென்று
பங்கமாய் அபிமானத் தொழிலே செய்து
பதுங்கினார் குருமுகத்துக் காகா மற்றான்
திங்களணி சடையார்தம் பாதஞ் சேராத்
தீவினையில் மெலிந்திட்டார் சிலராம் பேர்கள்

அப்படியே நீநழுவித் தடத்தை விட்டே
அம்பலத்திற் கேகாமற் காலன் பாசந்

தப்பவகை யறியாமற் பிறவி தன்னிற்
சாருவையோ நிலைகொண்டு சாதிப் பாயோ?
ஓப்பவே யுடற்பொருளு மாவி மூன்றும்
உதகத்தால் தாரைவிட்டே யுனைநா னென்று
செப்பவுந்தா னாவிழந்தே அடிமையாகிச்
சிந்தையற்றுச் சிவமாகி வாழ்க நீயே.

உயிர் சொல்லுதல்

பாக்கியங்கள் பெறவேண்டிக் குருவ டிக்குப்
பதறியே வந்ததொரு பாரி லுள்ளோர்
வாக்கினால் மனத்தாலுஞ் சாத கத்தின்
வருத்தத்தாற் சிதறினபே ராரா ரையா!
நோக்கினதிற் றவறாமற் பிடித்து முத்தி
நுண்ணறிவாற் பூரணத்தை அடைந்த தாரோ?
தாக்கியதோர் மைந்தர்களை யறியச் சொல்லும்
தயாபரனே குருமூர்த்தி சொல்வாய் நாதா!

குரு சொல்லுதல்

எத்தனையோ மைந்தர்களைப் பெற்றே னப்பா!
எடுத்துரைப்பேன் மதலையே இன்ப மாக
பத்திவை ராக்கியமும் நழுவி டாமல்
பாரிலுள்ளோர் தங்களுக்குச் சொந்த மாக
முத்திபெறு மனக்கண்ணும் பிரகா சித்து
மூதறிவால் தத்துவத்தை முழுது மாளச்
சத்துசித்தா னந்தமுமாய்ப் பூர ணத்தைச்
சார்ந்திட்டான் குழந்தையென்ற தங்கந் தானே.

ஆமென்றே வந்தவர்க ளின்ன முண்டிங்
கவரவர்க்குத் தீட்சைவைத்தோம் அன்ப தாக
ஓமென்ற முத்திநெறிக் கொவ்வு வாரோ
ஒதுங்கியே பதுங்கியே யோடு வாரோ!
நாமென்ற அகங்கொண்டு நழுவிப் போறார்
நாதனையே தூடித்து நலம்பெ றாமல்
போமென்ற தள்ளவில்லை அவர்கள் தாமே
பொல்லாங்கைக் குறித்தல்லோ போய்விட் டாரே.

நிலைக்கவென்று வந்தவரில் தவறிப் போன
நெஞ்சினரைச் சொல்லக்கேள் நினைவாய் நீயும்:
முலைகருதிக் கைப்பிடித்துப் பாலுண் ணாமல்
மூடத்தால் நானென்னு மகந்தை யுற்றுக்
கலைகருதி நில்லாமல் சாதிக் காமல்
கற்றபொருள் போதுமென்றே பெருமை கொண்டு
கொலைகளவாம் வஞ்சகத்தை விடாமற் றானே
குலைந்திட்டான் வைத்யலிங்கன் குரூரன் றானே.

உயிர் சொல்லுதல்

அப்பனே! மைந்தர்கள்தம் திறத்தைக் கேட்டேன்
அறிந்திட்டேன் முத்திபெற்றோர்க் கடியேன் றானே;
செப்பமாஞ் சரணங்கள் கோடி செய்தேன்;
சிதறினவர் பால்மனமுஞ் செல்ல ஓட்டேன்;
கொப்பனவே எனையாள இங்கு வந்த
கொற்றவனே! உனைப்போலத் துலக்கங் காணேன்;
இப்பொழுதே யடிமைகொண்டு காக்க வேண்டி
இரங்கியே யருள்புரிவாய் என்றன் கோவே!

அறிவாள னாகியே பணிய றுத்தே
அச்சங்க ளெல்லாந்தான் அறுத்துப் போட்டுக்
குறியாள னாகவே துணிந்து வந்த
கொடும்பாவி எனையாளக் கூச்ச மென்னோ?
தறியாள னாகிநின்ற வுலகத் தேதான்
சங்கையது வந்தாலுந் தாள மாட்டேன்!
முறியாள வந்தகுரு நாதா உன்றன்
முகிழ்மலர்த்தாள் கதியென்று முனைந்திட் டேனே.

குரு சொல்லுதல்

நிலமதனைச் சலத்தினாற் சுத்தி செய்து
நிராமயமாய்க் கணபதியை நாட்டி வைத்துப்
பலமுடைய சோதிமலர் சார்த்தி மிக்க
பரிவான புகைதூபங் காட்டிப் பின்னுந்
தலமுடைய வெளியதனை நிவேத னஞ்செய்
சரணஞ்செய் என்மகனே! உபதே சிப்போம்;
பிலமுடனே இடம்வலமாய்ச் சுற்றி வந்து
பெருவிரலைப் பற்றிக் கொள் பேரின் பத்தே.

அன்புடனே யுடல்பொருளும் ஆவி மூன்றும்
அறுதியாய் அளித்துவிட்டு நீதா னையா!
தென்புடனே அடிமையெனச் சத்தி யஞ்செய்;
சிதறாமல் நில்லப்பா! தீட்சை வைப்போம்;
பின்புன்றன் செவிதானே யோனி யாகப்
பேசுமென்ற னாவுதா னிலிங்க மாச்சே;
இன்பமுடன் அனுபோகத் திருக்க வென்றே
இருசெவியி லுபதேச மேற்று வேனே.

உயிர் சொல்லுதல்

அப்படியே பஞ்சசக்தி பூசை செய்தேன்;
அழகாகச் சரணம்பிர காரஞ் செய்தேன்;
செப்பினதோர் பெருவிரலைப் பற்றிக் கொண்டேன்;
தேகமுடன் பொருளாவி தத்தந் தந்தேன்;

ஒப்புதுவா யானுமே யடிமை யானேன்;
உலகமுழுகத் தடைவரினும் அறையேன் நிற்பேன்;
தற்பரனே! தீட்சை செய்வாய் கருணை வைத்துச்;
சற்குருவே! திருவடியிற் சரணென் றேனே.

குரு சொல்லுதல்

ஞான மென்பதில் நால்வகை யுண்டவை நாமுரைத் திடக்கேளாய்;
தான முற்றனர் சரியையுங் கிரியையுஞ் சாருமே சிவயோகம்;
மோன முற்றமெய்ஞ் ஞானமே நான்கதா முடிவதைப் பெறுவாயே;
ஈன மற்றவென் மைந்தனே! உன்னுடை இன்பமே துரைப்பாயே.

உயிர் சொல்லுதல்

தேசிகா இந்த நால்வகை யென்றவை தெரியும் உரைத்திட்டால்
மோச மாயின்ப முற்றிருப் பதுதனை மொழிந்திடு கெனக்கேட்பேன்;
ஆசை யற்றதா யிருந்தடி லுழைத்திட அதிசயங் கொள்வேனா;
நேச முற்றதிற் பத்தியே யுரைத்திடில் நிலைத்திடு மையாவே!

குரு சொல்லுதல்

அங்க சுத்தியும் ஆலயந் தொழுவதுஞ் சரியையென் றறைவார்கள்;
மங்க ளத்துடன் அட்டமா சித்தியும் வரையுஞ்சக் கரபூசை
பொங்க மானது கிரியையாம்; வாயுவைப் புரண்டிடா திழுத்திட்டுத்
தங்க நின்றதோர் யோகமென் றிதனையே சாற்றிடும் மறைதானே.

ஞான மேதெனக் கேட்டிடின் தத்துவம்
நானென வுணர்ந்திந்த
ஊனை நானென உரைத்திதை யகன்றுபின்
னொழிவறத் தனைக்கண்டு
மானம் வெட்கமுந் துக்கமுங் கவலையும்
வஞ்சனை தான்போக்கி
ஈன மற்றுநான் சிவமெனத் துணிந்து
மிழந்தது முடிவாமே.

உயிர் கேட்கக் குரு சொல்லுதல்

இந்த நாளினில் இன்பமுற் றிருக்கையி
லிச்சடம் விழுந்திட்டால்
சொந்த மானதோர் பலனென்ன தெரிந்திடச்
சொல்லுவாய் குருமூர்த்தி!

சொந்த மாகவே கேள்மகனே! மதன்
சுகமதை யறிவிப்போம்;
தந்த னங்களாய் விடாமலே கேட்பது
சரியென மகிழ்ந்தேனே.

சரியை யென்பது குறைவறச் செய்துமே தன்கடம் விழுந்திட்டால்
கிரியை செய்யவே எடுத்திடுங் கடமது கிரியையும் முடிந்தேகில்
உரிமை யாகிய யோகமே செய்யவு முட்டெடுத் துழைக்குங்காண்;
பரிகொள் யோகமு முற்றவு முடிந்துடற் பாரினு வருவாமே.
ஞான மேபெற எடுத்திடும் அவ்வுடல் நழுவிடா துரைத் திட்டால்
ஈன மாகிய செனன்மும் போக்கிடும் ஈசனே தானாகி,
வான முற்றுதோர் சச்சிதா னந்தமாய் வாக்குரைக் கெட்டாத
மோன முற்றுதான் எங்குமாய் நிறைந்தது முத்தியென் றுணர்வாயே.

உயிர் சொல்லுதல்

அப்பனே! எனை அடிமையாய்க் கொண்டவோர்
அழகுள்ள குருமூர்த்தி!
தப்ப வேகதி வேறெனக் கில்லைநின்
றாளது கதியென்றே
ஒப்ப வேசிவ ஞானமும் உணர்ந்திடி
லுகந்ததி லூன்றிக்கொண்
டிப்ப வேபர வீடதி லேகுவன்
ஈசனே! அருள்வாயே.

குரு சொல்லுதல்

தத்துவ மேயுடல் தானெனு மானது தன்னை யறிந்திடுநீ;
சித்தது வாகிப் பிராணணி ரானதில் திரண்டதைக் கண்டுநீ;
கற்றுமே காணாக் கண்மணி யானதைக் கண்டு தெளிந்திடுநீ;
முற்று சிவானந்த போதக மானது முத்தியு மிதுதானே.

அறிவுபோ தகமென்ற நூலைப் பாராய்;
அதற்குமுன்னே உடலறிவையும் விளக்கம் பாராய்;
பிறிவின்றி மேவின்றி மறைப்பு மின்றிப்
பேரின்ப அமுதமழை பெய்த நூல்தான்
நெறிகொண்ட அந்நூலை நினைந்து பாராய்;
நிலைக்கவே அப்படியே தீட்சை வைப்போம்;
பொறிவிட்டுச் சபைபுகுவாய் புக்கோ ரில்லை;
பெரும்பொருளைக் கைக்கொண்டு பிழைத்துக் கொள்ளே.

உயிர் சொல்லுதல்

அப்படியே போதித்த முத்தி பெற்றேன்;
அரியயனுங் காணாத வடிவங் கண்டேன்;
தப்பியே யிளைக்காமற் பிழைத்துக் கொண்டேன்;
சஞ்சலத்தை இழந்துநான் சுகத்தைப் பெற்றேன்;

ஒப்புவமை சொல்லவொரு வரையுங் காணேன்;
உனைப்போலே தெளிவுரைக்குங் குருவுங் காணேன்;
செப்பவே நாவிழந்தேன் பரமா னந்தத்
தீவிலே சேர்ந்திட்டேன் வாழ்ந்திட் டேனே.

ஞானியென்ற பெயர்களையே கண்டு கொள்ள
நல்லதொரு கண்பெற்றேன்; பேச வென்றால்
ஈனமறச் சொற்கற்றேன்; சிரவ ணத்தால்
ஏகாந்த பரகவனம் எய்த லானேன்;
மானமற்ற அடியருட னாசை கொண்டேன்;
மருவுமுடல் குருவுக்கே வணங்கிப் பெற்றேன்;
தானமுற்றேன் சிவானந்தந் தனிலே நின்றேன்;
சச்சிதா னந்தமென்றே தழைத்திட் டேனே.

வாழ்வுமுதற் சம்பத்தை மதித்தி டாமல்
மலைமேலே ஏறினதோர் பறவை யானேன்;
தாழ்வுகளாய் உலகோர்சொல் நிந்தை யெல்லாம்
சகாய மென்றே எண்ணிச்சந் தோட மானேன்
வீழ்வுதரு நரகிலுள்ள மாண்பர்க் கெல்லாம்
வீழாம லேமனிதர் மேலு மானேன்
ஏழுலகும் மேலேழும் நானே யானேன்;
ஏகாந்தந் தீவினிலே இறங்கி னேனே.

குரு சொல்லுதல்

மைந்தனே! உனைப்போல ஓடி மெள்ள
வாதனையே தீர்ந்துமதி மயங்கி டாமல்
பந்தமறுத் தேபின்பு குருவைத் தேடிப்
பரமாகி வாழ்ந்தவர்க ளுண்டோ அப்பா!
சிந்தையற்ற பெரியோரை வணங்கிக் கொள்வாய்;
சிவஞானி தன்னுடனே நேசஞ் செய்தே
என்றன்னைப் பெற்றவனே! அப்பா அப்பா!
எடுத்தணைந்தே அம்பரத்தில் இருப்போம் யாமே.

உயிர் சொல்லுதல்

மறந்தேனோர் வார்த்தை மகிழ்ஞான மூர்த்தி!
துறந்தே னினித்தெரியச் சொல்வாய் - சிறந்திலங்கு
பத்திசெய் வோர்க்குப் பலனே ததைக்கெடுக்கும்
குத்திரருக் கென்ன குணம்?

குரு சொல்லுதல்

எண்ணிலாத் தவங்கள் யாகங்கள் செயினும்
ஈசுர விண்ணுவா லயங்கள்
பண்ணுலாகங் கவிதை பாடினும் அனேகம்
பாரினில் வருபல னேது?

கண்ணுலா வியநற் சுருதிமெய்ப் பொருளைக்
கண்டர னடியவர் தமக்கிங்
குண்ணலா மமுத மளித்தவ னடையும்
பலனுரைக் கவுமுடி யாதே.

வேதமா கமசாத் திரபுரா ணங்கள் விரிந்தநூ லறிந்தடா விந்து
நாதமே யுருவாம் அத்விதா னந்த ஞானமே பெற்றிட வேண்டி
ஓதவல் லவர்சந் துச்சித்தா னந்த முற்றநல் லடியவர் தமக்குப்
பாதபூ சனைகள டங்கலுஞ் செய்தார் பலமென துரைக்கடங் காதே.

அன்ன மளிப்பவரைக் கலைப் பாரிவ் வவனிமிசை
இன்ன லவர்க்குப் புரிவார் நினைப்பா ரிகழ்ந்திடுவார்
மன்னவ ராயிருந் தேமரிப் பாரை மறலியினி
என்னென்ன வேதனை செய்தான் முடிவி லியம்பரிதே.

சிவனருள் பெற்றுயர் மேலோர் தமக்குஞ் சிவனையுன்னித்
தவஞ்செயன் பர்க்குஞ் சிவவேடம் பூண்டிடு தன்னியற்கும்
உவந்தே பணிபுரி வார்மே லுலகவ ருண்மையதாய்
அவஞ்செய் தவரை யிகழ்வோ ரடைவர் அருநரகே.

பெரியோர்க்குத் தொண்டுசெய் வாரைத் தடுத்திடும் பேதையரும்
சரியா நடுநிலை சார்ந்தவர்க் கல்லல் சமைப்பவரும்
பரிவான தீட்சைகொண் டாரை மறிக்குமப் பாதகரும்
எரிவாய் நரகத்தி லெண்ணில் துயரி லிருப்பரன்றே.
இந்நூலைப் பார்ப்போர் எடுப்போர் படிப்பவர்
நன்னூ லெனமனத்தி னாடுவோர் - பொன்னூற்
படியேறித் தாண்டிப் பவசா கரத்தைக்
கடவுளர்க்கு முன்னிற்பர் காண்.

சந்தேக மாதிகளைச் சாராம லேயகற்றிப்
பந்தபா சங்களைப் பாழாக்கும் - இந்தநூல்
எந்தநா ளும்மழியா தேகாந்த வீடதனைச்
சொந்தமாக் கும்மெனவே சொல்.

அரனங் கிரிவாழி! அம்பிகைதாள் வாழி!
பெருமான் பதம்வாழி! பின்னைசர ணம் வாழி!
பரமேட்டி யடிவாழி! பாரதிபா தம்வாழி!
கரிமுகவன் கழல்வாழி! கந்தனடி வாழியவே!

வான்வாழி வானையளி மாத வரும்வாழி!
கோன்வாழி குருவாழி குவலயத் தோர்வாழி!
ஆன்வாழி யமரர்முத லிருடிசித் தர்வாழி!
நான்நீ யெனலகற்று நாதாக்கள் வாழியவே!

2. நிஜானந்த போதம்

இந்த நூல் அருணாசல குரு என்ற சித்தர் அருளியதாகக் காணப்படுகிறது. இதற்குமேல் இது இயற்றப்பெற்ற வரலாறு கிடைக்கவில்லை.

சித்தர்களின் மரபுப்படி இந்த நூலிலே குருவணக்கம் விரிவாகவே சொல்லப்படுகிறது. இராயவேலூர் அமுதசித்தர் என்ற மகானுக்கு நீண்ட வணக்கம் சொல்லப் பெறுகிறது.

குரு துதி

சித்தவிசும் பிற்சத்தந் தேசலருஞ் சாசுவத
வத்துமயஞ் செய்தவன்றாள் வந்தித்து - நித்த
நிருமலப்பே ராரும் நிசானந்த போத
மருமமிசைப் பேனுள் மகிழ்ந்து.

மகான்கள் வணக்கம்

மனத்துறுசங் கற்ப மயமாயா லோகம்
அனைத்துமகண் டாகார மான - தனைத்தவிர
அன்னியமன் றாமெனக்கண் டாரவர்கள் தாள்துகள்நஞ்
சென்னிகொடு சீவிப்பம் சீர்.

சித்தர்கள் வணக்கம்

சீரார்ந்த துனர்மலியு தளிகண்பண் பட்ட விதி
திகழ்கின்ற பொதிகை முனிவர்
திவ்யகுண போகர்நந் தீசர்புண் ணாக்கீசர்
சீலகரு வூரரெங்கும்

பேரார்ந்த சுந்தரா நந்தர்திரு மூலர்மிகு
பெருமைசேர் கொங்கணமுனி
பிரமமுனி ரோமமுனி வாசமுனி யமலகுரு
பிரமமுனி கமலமுனிவர்

ஏரார்ந்த கோரக்கர் சட்டைமுனி மச்சமுனி
இடைக்காடர் முதலியர்களோ
டின்னமுயர் முத்தருயர் முத்தர்நவ நாதர்புவி
யிவர் மரபி லுற்றபுனிதர்

காரார்ந்த சுந்தரக் கடவுளடி யார்மலர்க்
கண்ணனடி யாரிவர்கடம்
கனமிகுந் திடுவனச பாதமல ரென்றும்
கருத்திலஞ் சலிசெய்குவாம்.

இராயவேலூர் அமுதசித்தர் வணக்கம்

செய்யவே லூரமுத சித்தரே! நாயடியேன்
உய்ய வொருதரநீ ரோதினால் - வையகத்தில்
பொய்யனைத்தும் பாழாகிப் புண்ணியத்துக் காதரவாய்
மெய்யனைத்தும் மேலாகு மே.

போளூர் பிரமம் ஸ்ரீஸபத்திரி அச்சுத தாசரவர்கள் இயற்றியது

உருவரு வின்மை யாகி ஒருபொருட் டன்மையாகித்
திருவரு ணன்மை யாகித் திகழ்நிசா னந்த போதம்
கருவருத் தங்க டந்து கனமுல குய்யச் சொற்றான்
குருவரு ணாச லன்றன் குறியுள்ள குணக்ஞன் மாதோ.

இராயவேலூர் இரத்தினமுதலியாரவர்கள் இயற்றியது

உலகிலோர் சரநூ லின்உண்மை யெல்லாம்
உணர்ந்ததன்மேல் நிசானந்த போதந் தன்னை
நலம்பெறவே யடைவரெனச் சித்தர் சொன்ன
நன்னூலை யாராய்ந்து நயப்பி னோடு
திலதமணி முகம்போலத் தெளிவா யார்க்குந்
தெரிந்திடவே வெளியிட்டான் திருத்த மாகப்
பலகலைகள் உணர்ந்தபண் டிதனா யிந்தப்
பாரிலரு ணாசலப்பேர் படைத்தா னன்றே.

உருவாய் அன்னமய மாதிபஞ்ச கோசம்
ஒன்றொன்றாய் நீங்கியதை யுணர்வறிவு தானாய்
இருவாத னைகணீங்கிச் சகலகே வலமும்
இராப்பகலில் லாதநிட்டை தனிலிருந்தெப் போதும்
பொருவில்லா நிரதிசயா னந்தமது மேவும்
பண்ணியர்க ளெச்சமய சாதிகளி லேனும்
நிருபாதி கப்பிரம வாரிதியின் மூழ்கும்
நிலைமையரே பிரமகுலம் நிகழ்த்திடவும் தகுமால்